**.நீதித்துறை நடுவர் கூடுதல் மகளிர் நீதிமன்றம், இராமநாதபுரம்.**
**முன்னிலை: திருமதி.E.வெர்ஜின் வெஸ்டா, B.A.,M..L..,M.B.A.**
**கூடுதல் மகளிர் நீதிமன்றம்**
**இராமநாதபுரம்.**

சுபகிருது வருடம் பங்குனி மாதம் 09 ம் நாள் வியாழக்கிழமை
2023 ம் ஆண்டு மாச் திங்கள் 23 ம் நாள் வியாழக்கிழமை

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.111/2022
CNR.No:TNRM120002212022

| | | |
|---|---|---|
| 1 | காவல் நிலையம் மற்றும் குற்ற எண். | காவல் ஆய்வாளர் அவர்கள்,<br>பஜார் காவல் நிலையம்,<br>இராமநாதபுரம்.<br>குற்ற எண்.169/2017 |
| 2 | பெயர் | கோபிநாத், வயது (31/2023) |
| 3 | தகப்பனார் பெயர் | த/பெ.அங்குசாமி, |
| 4 | தொழில் | விவசாயம் |
| 5 | விலாசம் | மேலத்தெரு, சூரங்கோட்டை,<br>இராமநாதபுரம். |
| 6 | வயது | |
| 7 | சம்பவ நாள் | 05.04.2017 |
| 8 | புகார் தேதி | 06.04.2017 |
| 9 | கைது செய்யப்பட்ட தேதி | 06.04.2017 |
| 10 | பிணையில் வெளிவந்த தேதி | 10.04.2017 |
| 11 | வழக்கு விசாரணை தொடங்கிய நாள் | 30.08.2022 |
| 12 | வழக்கு விசாரணை முடிந்த நாள் | 21.03.2023 |
| 13 | எதிரியின் மீதான குற்றச்சாட்டு<br>1 வது குற்றச்சாட்டு | எதிரி புகார்தாரரின் மகளை வரதட்சணை கேட்டு துன்புறுத்தி வாழ வைக்காமல் கொலைமிரட்டல் விடுத்து |

| | | |
|---|---|---|
| | | புகார்தாரரின் மகளை மனஉளைச்சலுக்கு ஆளாக்கி கொடுமைப்படுத்தியக் குற்றத்திற்காக இதச 498(A)–வின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம். |
| | 2 வது குற்றச்சாட்டு | எதிரி புகார்தாரரை பார்த்து போடா தாயோழி மாமாக்காரப்பயலே என்று அசிங்கமாக தகாத வார்த்தைகளால் பேசியக் குற்றத்திற்காக இதச பிரிவு 294(b)–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம். |
| | 3 வது குற்றச்சாட்டு | எதிரி புகார்தாரரை கீழே தள்ளிவிட்டதில் புகார்தாரருக்கு இடுப்பில் சாதாரணக்காயத்தை ஏற்படுத்தியக் குற்றத்திற்காக இதச பிரிவு 323–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம். |
| | 4 வது குற்றச்சாட்டு | எதிரி கொலை மிரட்டல் விடுத்தக் குற்றத்திற்காக இதச பிரிவு 506(i)–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம். |
| 14 | எதிரியின் பதிலுரை | குற்றவாளியில்லை |
| 15 | நீதிபதியின் முடிவு | குற்றவாளியில்லை |
| 16 | நீதிபதியின் ஆணை | முடிவாக சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து. எதிரி மீது பிரிவுகள் 498(A), 294(b), 323, 506(i) இதச மற்றும் பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் குற்றவாளி அல்ல என இந்நீதிமன்றம் முடிவுக்கு வந்து எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.<br>எதிரி எழுதிக் கொடுத்த பிணைமுறி |

மேல் முறையீட்டுக் காலத்திற்குப் பின் இரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் சொத்துக்கள் ஏதும் தாக்கல் இல்லை. எனவே அது குறித்து உத்தரவு இல்லை.

| | | |
|---|---|---|
| 17 | எதிரியின் வழக்கறிஞர் | திரு.S.தேசிகநாதன் |
| 18 | அரசு தரப்பு வழக்கறிஞர் | திரு.G. இளங்கோ |

இந்த வழக்கு 03.08.2022 ம் தேதி இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு கடந்த 21.03.2023 ம் தேதி என் முன்பாக இறுதி விசாரணைக்காக வந்தபோது அரசுக்காக குற்றம் முறையிடுபவர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் திரு.G. இளங்கோ அவர்கள் ஆஜராகியும், இந்த வழக்கின் எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.தேசிகநாதன் அவர்கள் ஆஜராகியும் இதுநாள் வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்..

## தீர்ப்புரை

### 1. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின் சுருக்கம்

இவ்வழக்கின், கடந்த 05.04.2017 ம் தேதி 21.30 மணியளவில், இவ்வழக்கின் புகார்தாரரின் வீட்டுக்கு முன்பு வைத்து புகார்தாரர் அவரது மனைவி மற்றும் மகளுடன் தகராறு செய்து கொண்டு இருந்த எதிரியைப் பார்த்து புகார்தாரர் ஏன் எனது மகளை வரதட்சணை கேட்டு வாழ வைக்காமல் தொந்தரவு செய்கிறாய், எங்களையும் ஏன் இப்படி கொடுமை செய்கிறாய் என்று கேட்டதற்கு, எதிரி புகார்தாரரைப் பார்த்து போடா தாயோழி மாமாக்காரப்பயலே என்று கீழே தள்ளிவிட்டதில் புகார்தாரருக்கு இடுப்பில் வீக்கக்காயத்தை ஏற்படுத்தியும் ஏதாவது பேசினால் கொலை செய்துவிடுவேன் என்று கொலைமிரட்டல் விடுத்தும், புகார்தாரருக்கு சாதாரண காயம் (Simple Injury)

ஏற்படுத்தியக் குற்றத்திற்காக எதிரி மீது பிரிவுகள் 498(A). 294(b), 323, 506(2) IPC & 4 of TNPWH Act–ன் கீழ் பஜார் காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் பிரிவு 173(2)–ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2. வழக்கு ஆவண நகல் வழங்கல், எதிரிகளிடம் விசாரணை...**

வழக்கு கோப்பில் ஏற்கப்பட்டு எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானதும் வழக்கு ஆவணங்களின் நகல்கள் குவிமுச பிரிவு 207ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது. காவல் அறிக்கையும், பிரிவு 173 குவிமுச ன் படி அனுப்பப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்ததின் பேரிலும் இந்நீதிமன்றம் "விசாரணை செய்வதற்கு தகுதியுள்ளதும், போதிய தண்டனை விதிக்கக்கூடிய குற்றத்தை எதிரி செய்திருக்கிறார் என அனுமானிப்பதற்கு ஆவணங்களில் போதிய ஆதாரம் உள்ளது" என இந்நீதிமன்றம் கருதி போதிய கால அவகாசம் அளித்து, எதிரி மீது பிரிவுகள் 498(A), 294(b), 323, 506(1) இதச மற்றும் பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் குற்றத்தின் விபரங்கள் பற்றி விளக்கிக்கூறி, குற்றச்சாட்டு வனைந்து குற்றம் செய்ததாக ஒப்புக்கொள்கிறீரா எதிர்வாதம் செய்யப்போகிறீரா? எனக் கேட்டபோது, எதிரி குற்றத்தை மறுத்தார். எனவே வழக்கு அரசு தரப்பு சாட்சியத்திற்கு என வகை செய்யப்பட்டது.

**3)** அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டினை நிரூபிக்கும் வகையில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான விசாரிக்கப்பட்டு, அவர்கள் மூலமாக அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**4) அரசு தரப்பு வழக்கு மற்றும் சாட்சிய சுருக்கம் பின்வருமாறு**

i) அ.சா.1 இராஜாராம் தனது சாட்சியத்தில், தனது மகளின் கணவர் 2, 3 வருடத்திற்கு முன்பு வீட்டில் குடும்ப விஷயமாக பேசிக்கொண்டிருந்தபோது இரவு நேரம் என்பதால் தனக்கு பிரஷர் அதிகமாகி கீழே விழுந்துவிட்டதாகவும், அதில் தனக்கு இடுப்பில் காயம் எற்பட்டதாகவும், அதன்பிறகு தன்னை ஒரு

ஆட்டோவில் ஏற்றி இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்ததாகவும், தான் சிகிச்சையில் இருந்தபோது போலீசார் ஒரு வெள்ளை பேப்பரில் கையொப்பம் வாங்கியதாகவும், தற்போது நீதிமன்றத்தில் தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள் கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அந்த புகாரில் என்ன எழுதியுள்ளது என்று தெரியாது என்றும், அந்த புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 என்றும், வழக்கு பற்றி வேறு விவரம் தனக்கு தெரியாது என்று கூறி பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

ii)அ.சா.2 இந்து ராணி தனது சாட்சியத்தில், 2, 3 வருடங்களுக்கு முன்பு விட்டில் குடும்ப விஷயமாக பேசிக்கொண்டிருந்தபோது இரவு நேரம் என்பதால் தனது கணவர் அ.சா.1 க்கு பிரஷர் அதிகமாகி கீழே விழுந்துவிட்டதாகவும், அதில் அ.சா.1 க்கு இடுப்பில் காயம் ஏற்பட்டதாகவும், அவரை தான் ஒரு ஆட்டோவில் ஏற்றி இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்ததாகவும், வழக்கு பற்றி வேறு விவரம் தனக்கு தெரியாது என்று கூறி பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

iii) அ.சா.3 பிரதீபா தனது சாட்சியத்தில், தானும் தனது கணவரும் தற்போது சேர்ந்து வாழ்ந்து வருவதாகவும், வழக்கு பற்றி வேறு விவரம் தனக்கு தெரியாது என்று கூறி பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

iv) அ.சா.4 அங்கம்மாள் தனது சாட்சியத்தில், வழக்கு பற்றி வேறு விவரம் தனக்கு தெரியாது என்று கூறி பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

v) அ.சா.5 வசந்தா தனது சாட்சியத்தில், தான் தற்போது பஜார் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், பஜார் காவல்நிலைய குற்ற எண்.169/2017, U/s.294(b), 323, 498A, 506(i) IPC & 4 of TNPHW Act ன் கீழ் வழக்குப்பதிவு செய்த திரு.வெள்ளைச்சாமி, சிறப்பு சார்பு ஆய்வாளர் தற்போது பணி ஓய்வு பெற்று வேறு மாவட்டத்தில் குடியிருந்து

வருகிறார் மற்றும் இந்த வழக்கின் விசாரணை அதிகாரி திரு.வெங்கடேசன், காவல் ஆய்வாளர் அவர்கள் தற்போது பணிமாறுதலாகி வேறு மாவட்டத்தில் பணிபுரிந்து வருவதாகவும், அவர்களது கையொப்பம் தனக்கு நன்கு தெரியும் என்றும், இவ்வழக்கின் கூடுதல் சாட்சியாக சேர்க்கப்பட்டு ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 06.04.2017ம் தேதி காலை 07.00 மணியளவில் சார்பு ஆய்வாளர் திரு.வெள்ளைச்சாமி அவர்கள் நிலையப் பொறுப்பிலிருந்தபோது இராமநாதபுரம் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலைப் பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த அ.சா.1 ராஜாராம் என்பவரின் புகார் வாக்குமூலத்தைப் பெற்று புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.169/2017, U/s.294(b), 323, 498A, 506(i) IPC & 4 of TNPHW Act ன் கீழ் வழக்குப் பதிவு செய்ததாகவும், புகார்தாரரின் புகாரையும் முதல் தகவல் அறிக்கையும் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 என்றும், புகார்தாரரின் புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.3 என்றும், பின்பு திரு.வெள்ளைச்சாமி சார்பு ஆய்வாளர் அவர்கள் வழக்கு கோப்பை திரு.வெங்கடேசன், காவல் ஆய்வாளர் அவர்கள் பார்வைக்கு வைத்ததாகவும், திரு.வெங்கடேசன் வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடம் சென்று சாட்சிகள் ஆனந்தன் மற்றும் சேதுபாண்டியன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், அந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 என்றும், அன்றைய தினமே சாட்சிகள் ராஜாராம், இந்திராணி, பிரதீபா, அங்கம்மாள் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்கமூலம் பதிவு செய்துள்ளதாகவும், அ.சா.1ற்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திருமதி.சண்முகப்பிரியா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பெற்று விபத்துபதிவேடு பெற்றதாகவும், அந்த விபத்து பதிவேடு அ.சா.ஆ.6 என்றும், இந்த வழக்கின் எதிரியை 06.04.2017ம் தேதி பகல் 13.00 மணியளவில்,

அரண்மனை பேருந்து நிலையத்தில் வைத்து கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், பின்பு அவரது விசாரணையை முடித்து அதே பிரிவின் கீழ் எதிரிக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக கூறி சாட்சியம் அளித்துள்ளார்.

**5)** அரசு தரப்பு சாட்சியங்களின் வாக்குமூலங்களின் எதிரிக்கு எதிராக தோன்றும் விபரங்கள் குறித்து எதிரியிடம் குவிமுச பிரிவு 313 (1)(ஆ) ன் கீழ் கேள்வி கேட்டபோது பொய் சாட்சி என்று எதிரி மறுத்துவிட்டார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என கூறினார்.

**<u>தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை..</u>**

**6)** எதிரி மீது அரசு தரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு தகுநிலை ஐயத்திற்கிடமின்றி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் மெய்ப்பிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**<u>தீர்வு..</u>**

**7)** அரசு தரப்பில் வாதுரைத்த கற்றறிந்த வழக்கறிஞர் இவ்வழக்கு சம்பவத்தில் எதிரி ஈடுபட்டுள்ளார். எதிரி மீதான குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதற்காக அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டு எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே எதிரிக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் என்று வாதுரைத்தார்.

**8)** எதிரி தரப்பில் வாதுரைத்த கற்றறிந்த வழக்கறிஞர், அரசு தரப்பு சாட்சிகள் அனைவரும் பிறழ் சாட்சியாக மாறியுள்ளனர் என்றும், காவல் துறை சரியாக புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டினை

சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை. எனவே எதிரிக்கு சந்தேகத்தின் பலனை வழங்கி விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

**9)** இவ்வழக்கில் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. கடந்த 05.04.2017 ம் தேதி 21.30 மணியளவில், இவ்வழக்கின் புகார்தாரரின் வீட்டுக்கு முன்பு வைத்து புகார்தாரரின் மனைவி, மகள் இருவரையும் பெண்கள் என்றும் பாராமல் தகராறு செய்து கொண்டு இருந்த எதிரியைப் பார்த்து புகார்தாரர் ஏன் எனது மகளை வரதட்சணை கேட்டு வாழ வைக்காமல் தொந்தரவு செய்கிறாய், எங்களையும் ஏன் இப்படி கொடுமை செய்கிறாய் என்று கேட்டதற்கு, எதிரி புகார்தாரரைப் பார்த்து போடா தாயோழி மாமாக்காரப்பயலே என்று கீழே தள்ளிவிட்டதில் புகார்தாரருக்கு இடுப்பில் வீக்கக்காயத்தை ஏற்படுத்தியும் கொலை செய்துவிடுவேன் என்று கொலைமிரட்டல் விடுத்ததாக முன்னிலைப்படுத்தப்பட்ட இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளாக அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**10)** இவ்வழக்கில் புகார்தாரர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட நிலையில், 2, 3 வருடத்திற்கு முன்பு வீட்டில் அ.சா.1 பேசிக்கொண்டிருந்தபோது பிரஷர் அதிகமாகி கீழே விழுந்ததில் இடுப்பில் காயம் ஏற்பட்டதாகவும், தான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலீசார் ஒரு வெள்ளை பேப்பரில் கையொப்பம் வாங்கியதாகவும், தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், வழக்கு பற்றி வேறு விவரம் தனக்கு தெரியாது என்றும் கூறி புகாரில் சொல்லப்பட்ட சங்கதிகளுக்கு முரண்பட்டு அரசு வழக்கை நிரூபிக்கும் வகையில் சாட்சியம் அளிக்காமல் பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

**11)** சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.2ம், அ.சா.1ன் சாட்சியத்தை ஒத்துரைத்தே சாட்சியம் அளித்து பிறழ் சாட்சியாக மாறியுள்ளார். அ.சா.3 தனது சாட்சியத்தில், தற்போது தானும் தனது கணவரான எதிரியும் சேர்ந்து வாழ்ந்து வருவதாகவும், வழக்கு பற்றி வேறு விவரம் தனக்கு தெரியாது என்று கூறி பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

**12)** இந்த நிலையில் அரசு தரப்பு வழக்கை எடுத்துரைக்கும் முக்கிய கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.1, அ.சா.2, அ.சா.3, அ.சா.4 வரையிலான சாட்சிகள், தங்கள் சாட்சியங்களில் அரசு தரப்பை வழக்கை எடுத்துரைக்கும் வகையிலும் உறுதிப்படுத்தும் வகையிலும் சாட்சியம் அளிக்காமல் அரசுக்கு எதிராக பிறழ் சாட்சியம் அளித்துள்ளதால், அரசு தரப்பு இவ்வழக்கின் இதர பட்டியல் சாட்சிகளின் சாட்சியங்களை நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் விசாரிக்காமல் நீக்கரவு செய்துள்ளது. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் அனைத்தும் முன்னுக்கு பின் முரணாகவே உள்ளது. எனவே, எதிரி மீது அரசு தரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**13)** இந்நிலையில், அ.சா.5, திருமதி.வசந்தா, இவ்வழக்கின் விசாரணை அதிகாரி அவர்கள் இவ்வழக்கை புலன் விசாரணை செய்ததை குறித்து, ஆவணங்களின் அடிப்படையில் நீதிமன்ற முன் அனுமதியுடன் கூடுதல் சாட்சியாக சேர்க்கப்பட்டு சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலம் அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.5 தனது சாட்சியத்தில் சார்பு ஆய்வாளர் திரு.வெள்ளைச்சாமி அ.சா.1ன் புகாரைப் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்தும் விசாரணை அதிகாரி சாட்சிகளை விசாரித்து, குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து மட்டும் சாட்சியம் அளித்துள்ளார்.

**14)** இவ்வழக்கில் புகார்தாரரான அ.சா.1, மற்ற சாட்சிகள் அ.சா.2, அ.சா.3, அ.சா.4 ஆகியோர்கள் பிறழ் சாட்சியாக மாறியுள்ள நிலையிலும், அ.சா.5 இவ்வழக்கில் புலன் விசாரணை செய்தது குறித்து மட்டும் சாட்சியம் அளித்திருந்த நிலையில் அவரின் சாட்சியத்தைக் கொண்டு சம்பவம் நடைபெற்றிருக்கலாம் என்றும், அது குறித்து விசாரணை செய்திருக்கலாம் என்றும் மட்டுமே உறுதிப்படுத்த இயலும் என்பதாலும் எதிரி குற்றம் புரிந்துள்ளார் என்பதற்கும் எதிரியின் மீதான குற்றச்சாட்டிற்க்கும் தெளிவான சாட்சியம் எதுவும் இல்லை என்று இந்த நீதிமன்றம் கருதி சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்குவது நியாயம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**15)** இந்த நிலையில் மேற்கண்ட விவாதங்களை பரிசீலிக்கையில் இந்த வழக்கு எதிரி மீதான மேற்கண்ட குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி போதுமான சாட்சிய சான்றாவணங்களை கொண்டு நிரூபணம் செய்ய தவறியுள்ளது என முடிவுக்கு வந்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி இந்நீதிமன்றம் விடுதலை செய்கிறது.

**16)** **முடிவாக:** சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரி மீது பிரிவுகள் 498(A), 294(b), 323, 506(i) இதச மற்றும் பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் குற்றவாளி அல்ல என இந்நீதிமன்றம் முடிவுக்கு வந்து எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

எதிரி எழுதிக் கொடுத்த பிணைமுறி மேல் முறையீட்டுக் காலத்திற்குப் பின் இரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது..

இவ்வழக்கில் சொத்துக்கள் ஏதும் தாக்கல் இல்லை. எனவே அது குறித்து உத்தரவு இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் 2023 ம் ஆண்டு மார்ச் திங்கள் 23 ம் நாள் வியாழக்கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2023.03.23 16:53:39 +0530

**அரசு தரப்பு சாட்சிகள்**

1)அ.சா.1 – இராஜாராம்

2)அ.சா.2 – இந்து ராணி

3)அ.சா.3 – பிரதீபா

4)அ.சா.4 – அங்கம்மாள்

5)அ.சா.5 – வசந்தா (சிறப்பு சார்பு ஆய்வாளர்)

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :–**

1)அ.சா.ஆ.1 – புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து

2)அ.சா.ஆ.2 – முதல் தகவல் அறிக்கை

3)அ.சா.ஆ.3 – புகார் வாக்குமூலம்

4)அ.சா.ஆ.4 – பார்வை மகஜர்

5)அ.சா.ஆ.5 – மாதிரி வரைபடம்

6)அ.சா.ஆ.6 – விபத்து பதிவேடு

**அரசு தரப்பு சான்றுபொருள்;:–** இல்லை

**<u>எதிரி தரப்பு சாட்சிகள் சான்று பொருட்கள் மற்றும் சான்றாவணங்கள்;:-</u>**

இல்லை

**<u>குறிப்பு :-</u>**

1) எதிரி வழக்கு விசாரணையின்போது பிணையில் இருந்தார்.

1) சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் விசாரிக்கப்படவில்லை

2) தீர்ப்பு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2023.03.23 16:53:56 +0530